2016

No. of Printed Pages : **4**

2016 401560

**5972**

*Register Number*

**First Year**

# அறிவியல் கற்பித்தல்

# TEACHING OF SCIENCE

(Tamil Version)

நேரம் : 3 மணி

மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :**
(1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - அ

## (பாடப்பொருள்)

**I.** (அ) **குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். ஒவ்வொன்றுக்கும் **100** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **10x2=20**

**1.** உணவுப் பொருள்களின் வகைகள் யாவை?

**2.** மூளை உடலின் தலைமைச் செயலகம் எனக் அழைக்கப்படுகிறது, ஏன்?

**3.** வறள் நிலத் தாவரங்கள் என்றால் என்ன?

**4.** வளிமண்டல அடுக்குகளை பட்டியலிடுக.

**5.** காற்றிற்கு பாயும் தன்மை உண்டு என்பதை தக்க ஆய்வின் மூலம் நிரூபி.

**6.** எதிர் சவ்வூடு பரவலை தக்க உதாரணத்துடன் விளக்குக.

[ Turn over

7. ஆடைகளை தூய்மையாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை விளக்குக.

8. அணைக்கட்டுகள், பாலங்கள் கட்ட கற்காரையை பயன்படுத்துவது ஏன்?

9. பரப்பு இழுவிசை - விளக்குக.

10. வீட்டுக் கழிவைப் பயன்படுத்தி எவ்வாறு உயிர் உரங்கள் தயாரிப்பாய்?

## (கற்பிக்கும் முறை)

(ஆ) **குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் 100 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **10x2=20**

11. NCF 2005 - வரையறுத்துள்ள ஏதேனும் இரு அறிவியல் கற்பித்தல் நோக்கங்களை எழுதுக.

12. செய்து கற்றல் முறையில் கற்பிக்க ஏதுவான இரண்டு அறிவியல் பாடத் தலைப்புகளை குறிப்பிடுக.

13. அறிவியல் பற்றிய பிட்ஸ்பேட்ரிக்கின் கூற்று யாது?

14. அறிவியல் முறையில் ஆசிரியரின் பங்கினை தொகுத்துக் கூறுக.

15. பள்ளி ஒப்படைவுகளில் ஏதேனும் நான்கு வகைகளை எழுதுக.

16. ஒப்படைவு வழங்கும் முன் ஆசிரியர் மேற்கொள்ள வேண்டிய முன் தயாரிப்பு பணிகள் யாவை?

17. செயல் வழிக்கற்றல் படிநிலைகளில் மூன்று மற்றும் நான்காம் குழுக்களில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளை விளக்குக.

18. புறவயச் சோதனையின் நன்மைகள் யாவை?

19. அளவீடு, மதிப்பீடு - ஒப்பிடுக.

20. மருத்துவத் தாவரங்களின் பயன்கள் என்ற திறனுக்கு பொருத்துதல் வகையில் மாதிரி வினா தயாரிக்க.

## பகுதி - ஆ

### (பாடப்பொருள்)

II. (அ) **குறிப்பு :** எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் **200** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **5x4=20**

**21.** வைட்டமின்களையும் அவற்றால் ஏற்படும் குறையீட்டு நோய்களையும் அட்டவணைப்படுத்துக.

**22.** இரத்தத் திசுவின் ஆக்கக் கூறுகளை வகைப்படுத்தி விளக்கும் மன வரைபடம் ஒன்றை உருவாக்குக.

**23.** மருத்துவத் தாவரங்களின் பெயர்கள், அவற்றில் மருந்தாகப் பயன்படும் பாகம் மற்றும் அவை தீர்க்கும் நோய்களை அட்டவணைப்படுத்துக.

**24.** காற்றின் வகைகளை வேறுபடுத்துக.

**25.** நீர் சேமிப்பு குறித்து விளக்குக.

**26.** காலத்திற்கேற்ற ஆடைகளை பட்டியலிடுக.

**27.** மூன்று வகையான காரைகளைப் பற்றி விளக்குக.

**28.** தனிமங்கள், சேர்மங்கள், கலவைகள் இவற்றிற்கிடையே உள்ள வேற்றுமைகளை பட்டியலிடுக.

### (கற்பிக்கும் முறை)

(ஆ) **குறிப்பு :** எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் **200** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **5x4=20**

**29.** அறிவியல் கற்பித்தல் நோக்கங்களை பெஞ்சமின் புளூம் எவ்வாறு வகைப்படுத்தியுள்ளார்?

**30.** அறிவு சார்ந்த பொது நோக்கங்களையும் அவற்றிற்குரிய வினைச் சொற்களையும் அட்டவணைப்படுத்துக.

**31.** அறிவியல் முறையின் நிறைகளை பட்டியலிடுக.

[ Turn over

32. ''கழிவுப் பொருள் மேலாண்மை'' என்ற திறனை அறிவியல் முறையின் ஏதேனும் இரண்டு படிநிலைகளை கொண்டு விளக்குக.

33. செய்து கற்றல் முறையின் நோக்கங்கள் யாவை?

34. கருத்தரங்கின் வகைகளை விளக்குக.

35. வளரறி மதிப்பீடு, தொகுத்தறி மதிப்பீடு - ஒப்பிட்டு வேறுபடுத்துக.

36. தாவரங்களின் பாகங்கள் மற்றும் பயன்கள் என்ற திறனுக்கு ஒவ்வொரு கற்பித்தல் நோக்கத்திற்கும் இரு வினாக்கள் தயாரிக்கவும்.

## பகுதி - இ

III. குறிப்பு : **இரண்டு** வினாக்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் **500** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **2x10=20**

37. (அ) செய்து கற்றல் முறையின் படிநிலைகளை தக்க எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**அல்லது**

(ஆ) தலைப்பு சார் ஒப்படைவை தகுந்த எடுத்துக்காட்டுடன் விளக்குக.

38. (அ) ''நீர் மாசுபடுதல்'' என்ற திறனை கருத்தரங்க கற்பித்தல் முறை மூலம் எவ்வாறு கற்பிப்பாய்?

**அல்லது**

(ஆ) மூன்றாம் வகுப்பில் 'எளிய கருவிகள்' என்ற பாடப்பகுதிக்கு செயல்வழிக் கற்றல் அணுகுமுறையில் திட்டமிட்டு ஒரு கற்றல் நிகழ்வை உருவாக்குக.

-oOo-